05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# NILAI-NILAI MURNI DALAM LIRIK LAGU-LAGU KANNADASAN
# கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் நன்னெறிக் கூறுகள்

DURAIMUTHU SUBRAMANIAM
துறைமுத்து சுப்ரமண்யம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT MEMPEROLEH
IJAZAH DOKTOR FALSAFAH (KESUSASTERAAN TAMIL)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வின் சாரம்

இவ்வாய்வு தேர்ந்தெடுக்கப்பட்ட கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் காணக்கிடக்கும் நன்னெறிக் கூறுகளைத் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண(KSSR) நன்னெறிக் கலைத்திட்டத்தின் நன்னெறிக் கல்விப் பாடத்திட்டக் கூறுகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் கூடுதலான புதிய நன்னெறிக் கூறுகளை அடையாளம் காண்பதோடு நன்னெறிக் கூறுகளுக்கான கருத்துருகளை வகுத்துத் ,KSSR நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்வதையும் நோக்கமாகவும் கொண்டுள்ளது. பண்புசார் முறைமையில் கண்ணதாசன் எழுதிய 5329 பாடல்களுள் 326 பாடல்களை மட்டும் தெரிவு செய்து ஆய்வுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இறுதியில் அனைத்தையும் ஒப்பீடு செய்து தரமான தகவலைச் சேகரிக்கும் முறைமை அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவுகளை வலுப்படுத்த தோமஸ் லிக்கோனோவின் உயர்நெறி மாந்தர் கோட்பாடு, எரிக் எரிக்சன், சிக்மன் பிராய்ட், லாரன்ஸ் கால்பெர்க் ஆகியோரின் பிள்ளைப் பருவக் கற்றல் நெறிக் கோட்பாடு ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து, அடையாளம் காணப்பட்டிருக்கும் கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் கொண்டுள்ள நன்னெறிக் கூறுகளுக்கும் KSSR நன்னெறிக் கலைத்திட்டத்தின் 14 கூறுகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை அம்சங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு அவற்றுக்கான கருத்துருகளை ஆராய்ந்து வகைப்படுத்தி முன் வைக்கப்படுகின்றது. கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் கூடுதலான புதிய நன்னெறிக் கூறுகளாகக் *கற்பு, கொல்லாமை, வினைக் கொள்கை* எனும் மூன்று நன்னெறிக் கூறுகள் கண்டறியப்பட்டு KSSR நன்னெறிக் கலைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி பரிந்துரைக்கப் பெற்ற 14 நன்னெறிக் கல்விக் கூறுகளுக்கான கருத்துருகளும் கூடுதலான நன்னெறிக் கூறுகளும் மலேசிய கல்வி அமைச்சு தமது பாடத் திட்ட மறுசீரமைவின் போது கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், இவ்வாய்வு திரையிசைப் பாடல்கள் தனியொரு மனிதனை உன்னத மனிதனாக்கும் ஆற்றலுடையது என்பதை நிறுவுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# NILAI-NILAI MURNI DALAM LIRIK LAGU-LAGU KANNADASAN

## ABSTRAK

Kajian ini bertujuan mengenal pasti nilai-nilai murni Sukatan Pendidikan Moral Kurikulum Standard Sekolah Rendah (KSSR) yang terdapat dalam lirik lagu-lagu Kannadasan; membina konsep bagi 14 nilai murni Sukatan Pendidikan Moral KSSR; menganalisis persamaan yang terdapat dalam kedua-dua bahan kajian serta mengenal pasti nilai moral tambahan yang digambarkan dalam lirik lagu-lagu Kannadasan. Kaedah kualitatif iaitu kajian kepustakaan dan analisis teks serta Teori Insan Mulia oleh Thomas Licona dan Teori Perkembangan Kanak-Kanak yang diperkenalkan oleh Lawrence Kohlberg , Jean Piaget, Sigmund Freud, dan Erik Erikson telah digunakan untuk mengkaji 326 buah lirik lagu-lagu Kannadasan.Hasil dapatan kajian ini menunjukkan hampir semua lirik lagu-lagu Kannadasan mengandungi 14 nilai-nilai murni yang terkandung dalam Sukatan Pelajaran Moral KSSR.Kajian ini membentuk konsep yang jelas dan tepat bagi 14 nilai murni dalam Sukatan Pelajaran Pendidikan Moral KSSR. Sebanyak tiga nilai murni tambahan iaitu *karpu (chastity), kollamai (non-violence)* dan *vinai kolgai (karma)* telah dikenal pasti.Tiga nilai moral tambahan dan konsep nilai moral yang dibina dalam kajian ini boleh digunakan oleh Kementerian Pelajaran Malaysia semasa menggubal Sukatan Pelajaran Pendidikan Moral KSSR. Lirik lagu-lagu Kannadasan boleh juga digunakan untuk membina sahsiah seseorang insan menjadi orang yang mulia dan warganegara yang berguna.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UPC DONE MyTO SCAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# NOBLE VALUES IN THE LYRICS OF KANNADASAN SONGS

## ABSTRACT

This study aims to identify the nobel values in the Moral Education syllabus of the Primary School Standard Curriculum (KSSR) found in the lyrics of the songs of Kannadasan; to build concepts for the 14 nobel values of the KSSR Moral Education Syllabus; to analyse the similarities found both in the research materials and to identify additional moral values found in the lyrics of Kannadasan's songs. The study has adopted the qualitative method, in doing literary reviews and text analysis and also in using the theories of Precious Human Theory by Thomas Licona and Child Development Theories of Lawrence Kohlberg , Jean Piaget, Sigmund Freud, dan Erik Erikson to study the 326 selected songs written by Kannadasan. The findings show that all the 14 nobel values of the KSSR Moral Education Syllabus are found in the selected lyrics. The study has conceptualised the 14 nobel values of the KSSR Moral Education Syllabus clearly and precisely. Apart from the usual nobel values additional nobel values, i.e *karpu (chastity), kollamai (non-violence)* and *vinai kolgai (karma),* have been identified. These three additional moral values and concepts of morality constructed in this study can be included in the future reviews of the Moral Education Syllabus by the Ministry of Education. The lyrics of Kannadasan songs can also be used to build a noble personality in a human being and useful citizen.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தலைப்பு | |
| ஆய்வாளர் உறுதிமொழி | |
| நன்றியுரை | iii |
| சமர்ப்பணம் | v |
| ஆய்வின் சாரம் | vi |
| ஆய்வின் சாரம் (மலாய்மொழி) | vii |
| ஆய்வின் சாரம் (ஆங்கிலமொழி) | viii |
| பொருளடக்கம் | ix |
| அட்டவணை பட்டியல் | xv |
| வரைபடப் பட்டியல் | xvi |
| **இயல் 1: அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வின் நோக்கம் | 5 |
| 1.3 ஆய்வின் வினா | 6 |
| 1.4 ஆய்வின் முக்கியத்துவம் | 6 |
| 1.5 ஆய்வின் சிக்கல் | 8 |
| 1.6 ஆய்வின் மூலமும் வரையறையும் | 9 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.7 இயல் பகுப்பாய்வு 11

1.8 முடிவுரை 12

இயல் 2: முந்தைய ஆய்வுகள்

2.1 முன்னுரை 14

2.2 முந்தைய ஆய்வுகள் 15

2.2.1 முனைவர் பட்டத்திற்குரிய ஆய்வுகள் 15

2.2.2 முதுகலை பட்டத்திற்குரிய ஆய்வுகள் 22

2.2.3 மற்றப் பிற ஆய்வுகள் 25

2.3 முடிவுரை 31


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இயல் 3: ஆய்வு நெறிமுறை

3.1 முன்னுரை 34

3.2 ஆய்வு வடிவமைப்பு கட்டமைப்பு 40

3.3 ஆய்வு கோட்பாடு 42

3.3.1 லாரன்ஸ் கால்பெர்க் நன்னெறிக் கோட்பாடுகள் 42

3.3.2 சிக்மென்ட்பிராய்ட் நன்னெறிக் கோட்பாடுகள் 45

3.3.3 ஜோன் பியாஜட் நன்னெறிக் கோட்பாடுகள் 50

3.3.4 எரிக்எரிக்சன் (ErikErikson1902-1994)& கல்வி வளர்ச்சிப்படிநிலைகள் 54

3.3.5 தோமஸ் லிக்னோ & உயர்நெறி மாந்தர் கோட்பாடு நன்னெறிக்கல்வி 58

3.4 முடிவுரை 71


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 4 : பகுப்பாய்வு


4.0 முன்னுரை 72

4.1 கண்ணதாசனும் திரையிசைப் பாடல்களும் 73

4.2 பகுப்பாய்வு முடிவுகள் 81

4.2.1 இறை நம்பிக்கை 82

4.2.1.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் இறை நம்பிக்கை 85

4.2.1.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் இறை நம்பிக்கை 89

4.2.2 நன்மனம் 102

4.2.2.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் நல்மனம் 106

4.2.2.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் நல்மனம் 110

4.2.3 கடமையுணர்வு 118


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.3.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் கடமையுணர்வு 120

4.2.3.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் கடமையுணர்வு 123

4.2.4 நன்றியுணர்வு 133

4.2.4.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் நன்றி நவில்தல் 135

4.2.4.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் நன்றி நவில்தல் 138

4.2.5 உயர்வெண்ணம் 145

4.2.5.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் உயர்வெண்ணம் 148

4.2.5.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் உயர்வெண்ணம் 150


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.2.6 மரியாதை 158

4.2.6.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் மரியாதை 161

4.2.6.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் மரியாதை 166

4.2.7 அன்புடைமை 177

4.2.7.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் அன்புடைமை 179

4.2.7.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் அன்புடைமை 184

4.2.8 நீதியுடமை 194

4.2.8.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் நீதியுடமை 196

4.2.8.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் நீதியுடமை 200

4.2.9 துணிவு 207

4.2.9.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் துணிவு 209

4.2.9.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் துணிவு 214

4.2.10 நேர்மை 225

4.2.10.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் நேர்மை 228

4.2.10.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் துணிவு 231

4.2.11 ஊக்கமுடைமை 237

4.2.11.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் ஊக்கமுடைமை 239

4.2.11.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் ஊக்கமுடைமை 242


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.12 ஒத்துழைப்பு 254

4.2.12.1 தரவுகள்: கண்ணதாசன் ஒத்துழைப்பு 257

4.2.12.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் ஒத்துழைப்பு 260

4.2.13 மிதமான மனப்பான்மை 268

4.2.13.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் மிதமான மனப்பான்மை 270

4.2.13.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் மிதமான மனப்பான்மை 275

4.2.14 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை 282

4.2.14.1 தரவுகள்: கண்ணதாசன் பாடல்களில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை 285

4.2.14.2 பகுப்பாய்வு: கண்ணதாசன் பாடல்களில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை 288

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3.1 கற்பு 295

4.3.1.1 பகுப்பாய்வு : கண்ணதாசன் பாடல்களில் கற்பு 300

4.3.2 கொல்லாமை 310

4.3.2.1 பகுப்பாய்வு : கண்ணதாசன் பாடல்களில் கொல்லாமை 314

4.3.3 வினை கொள்க 322

4.3.3.1 பகுப்பாய்வு : கண்ணதாசன் பாடல்களில் வினை கொள்க 328

இயல் 5 : ஆய்வு முடிவு

5.1 முன்னுரை 330

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


5.2 கண்டுபிடிப்புகள் 338

5.3 முடிவுரை 347

5.4 எதிர்கால ஆய்விற்கான பரிந்துரை 347

**மேற்கோள் ஆவணங்கள்** 349

**பின்னிணைப்பு**

**பின்னிணைப்பு அ**

**பின்னிணைப்பு ஆ**

**RINGKASAN EKSEKUTIF**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# அட்டவணைப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | எரிக் எரிக்சனின் கொள்கைப்படியிலான வளர்ச்சிப் படிநிலைகள் | 55 |
| 3.2 | நன்னெறிக் கல்வித்தர கலைத்திட்டத்தின் ஆறு கருக்கள் | 61 |
| 3.3 | உயர்நெறி மாந்தர் சிந்தனா ஆற்றல் | 68 |
| 4.1 | தொடக்கப்பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கலைத்திட்டத்தின் 14 கற்றல் தரங்கள் | 73 |
| 4.2 | கண்ணதாசன் பாடல்களில் இறை நம்பிக்கை | 79 |
| 4.3 | கண்ணதாசன் பாடல்களில் நல்மனம் | 99 |
| 4.4 | கண்ணதாசன் பாடல்களில் கடமையுணர்வு | 115 |
| 4.5 | கண்ணதாசன் பாடல்களில் நன்றி நவில்தல் | 130 |
| 4.6 | கண்ணதாசன் பாடல்களில் உயர்வெண்ணம் | 142 |
| 4.7 | கண்ணதாசன் பாடல்களில் மரியாதை | 155 |
| 4.8 | கண்ணதாசன் பாடல்களில் அன்புடைமை | 174 |
| 4.9 | கண்ணதாசன் பாடல்களில் நீதியுடைமை | 191 |
| 4.10 | கண்ணதாசன் பாடல்களில் துணிவு | 203 |
| 4.11 | கண்ணதாசன் பாடல்களில் நேர்மை | 222 |
| 4.12 | கண்ணதாசன் பாடல்களில் ஊக்கமுடைமை | 233 |
| 4.13 | கண்ணதாசன் பாடல்களில் ஒத்துழைப்பு | 251 |
| 4.14 | கண்ணதாசன் பாடல்களில் மிதமான மனப்பானமை | 264 |
| 4.15 | கண்ணதாசன் பாடல்களில் விட்டுக் கொடுக்கும் மனப்பன்மை | 278 |
| 4.3.1 | கண்ணதாசன் பாடல்களில் கற்பு | 290 |
| 4.3.2 | போலீசாரால் விபச்சார வழக்கில் கைது செய்யப்பட்ட விபச்சார | 302 |
| 4.3.3 | பெண்கள் | 309 |
| 4.3.4 | கண்ணதாசன் பாடல்களில் கொல்லாமை | 317 |
| 4.3.5 | கண்ணதாசன் பாடல்களில் வினைக் கொள்கை | |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# வரைபடப் பட்டியல்

எண் பக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு கட்டமைவு | 40 |
| 3.2 | ஆய்வு கோட்பாடு | 41 |
| 3.3 | தாமஸ் லிக்னோவின் உயர்நெறி மாந்தர் தன்மை | 60 |
| 3.4 | அடிப்படை உயர் நெறி மாந்தர் கோட்பாடு | 64 |
| 3.5 | உயர்நெறி மாந்தர் நன்னெறிக் கல்வி முறைமை | 69 |
| 4.1 | பகுப்பாய்வு முறைமை | 73 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் ஒன்று

# அறிமுகம்

## 1.1 முன்னுரை

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அடித்தளமாக பொருளாதார வளர்ச்சியையும் மனித ஒழுக்கத்தையும் கூறுவர். பொருளாதார வளர்ச்சியென்பது இயற்கை வளத்தை ஒட்டி அமைவது (Noorsiah Sabri, 1998, ப.3-5). இவ்வாறு அமையும் இயற்கை வளங்களைச் சரியான முறையில் அறிவு கொண்டு மேம்படுத்த மனித வளம் தேவைப்படுகின்றது. இவ்வகையில் உலகம் அனைத்து மக்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஆற்றல் மிக்கதாகவே விளங்குகின்றது. ஆனால், மனிதர்களின் பேராசையானது கட்டற்று அனைத்தையும் தனக்கே சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் எனும் போக்கில் அமைவதால் எல்லோருக்கும் இயற்கையாக அமைய வேண்டிய அடிப்படை வசதி கூட அமையாமல் போய் விடுகின்றது ( பரதன், 1995, ப.37 ).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதன் அடிப்படையில் காணும் போது ஒரு நாட்டிலுள்ள வளங்களின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியானது நிர்ணயிக்கப்பட்டாலும் அந்த நாடானது மக்கள் வாழ்வதற்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஏற்ற நாடா இல்லையா என்பதனை மக்களிடையே நிலவும் ஒழுக்கமும் நன்னெறிக் கூறுகளுமே முடிவு செய்கின்றன எனும் கருத்து வெளிப்படுகின்றது. இக்கருத்தையே ஔவையும்

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
"எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்: 187)

எனும் புறநானூற்றுப் பாடலின் வழி முன்வைக்கின்றார். ஒரு நாட்டு மக்கள் நல்ல மனமும் உயர் பண்புகளும் பெற்றவர்களாக இருப்பார்களாயின், அந்த நாடும் அதன் மக்களும் நல்ல வளர்ச்சியை அடைய வாய்ப்புண்டு.(Ishak Saad, 2009, ப.263).

திருவள்ளுவர் ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாகக் கூறுகின்றார். ஒழுக்கத்தை எப்பாடு பட்டாவது மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும். ஒழுக்க வாழ்வே உயர்வானது. ஒழுக்கமில்லாதவருக்கு உயர்வு எட்டாத கனியாக இருக்கும் என்கிறார் திருவள்ளுவர். ஏற்படும் பிழைகளுக்கும் குற்றங்களுக்கும் ஒழுக்க மீறலே காரணம். ஒழுக்கமுடையார் மேம்பாடு அடைவர், அவர்களைப் பழி சேராது. நல்லொழுக்கம் இனிய வாழ்வுக்கு அடிப்படையாக அமையும் (திருக்குறள், ஒழுக்கம் உடைமை). அதனால்தான் திருவள்ளுவரும் இதற்கெனத் தனித்த ஓர் அதிகாரத்தை உருவாக்கி இந்தியப் பாரம்பரியத்தின் அடி நாதமாகத் திகழ்கின்ற ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒழுக்கம் என்பது நற்பண்புகளின் கூட்டில் விளைவதாக உள்ளது என்பதனை மேற்காணும் அதிகாரத்தின் அடிப்படையில் உணர்ந்து கொள்ளலாம். இதன் அடிப்படையில் ஒரு சமுதாயத்தில் ஒழுக்கம் நிலைபெற வேண்டுமாயின் அச்சமுதாயத்தினர் நற்பண்புகள் உடையவர்களாக விளங்க

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



வேண்டும். இதனால்தான் எல்லா இடங்களிலும் நன்னெறிக் கூறுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது.

தொடக்ககாலம் தொட்டே எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் நன்னெறிப் பண்புகளைப் போற்றுவனவாகவே எழுந்தன. சமயப் புனித நூல்களும், இலக்கியங்களும் கூட நன்னெறிகளுக்கே முதன்மை கொடுத்திருந்தன என்பதை இராமாயணம், மகாபாரதம், திருக்குறள் போன்ற பெரிய இலக்கியங்களின் சாரத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது (சத்தியபாமா, 2011, ப.82). எனவே நற்பண்புகள் என்பவை உயர்ந்த உன்னதமான சமுதாய ஆக்கத்திற்கு ஆதாரமாக விளங்குவதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட நன்னெறிகளைக் குழந்தைப் பருவம் தொட்டே மனிதர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. எனவே, நன்னெறிக் கூறுகள் போதனா திட்டத்தில் தவிர்க்க முடியாத, தவிர்க்கக் கூடாத ஒன்றாக இருக்கின்றன என்று கல்வியியலாளர்கள் பலரும் கருத்துரைக்கின்றனர் (தோமஸ் லிக்னோ, 2004, ப.13).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியக் கல்வித் திட்டத்திலும் இந்தக் கருத்து முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வகுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இது மலேசிய நாட்டின் தேசியக் கல்விக் கொள்கையில் ஒரு முக்கியக் கூறாகவே குறிப்பிடப்பட்டுள்ளது (PPK, 2009, ப.5). இதனை மலேசியப் பிரதமரும் பத்தாவது மலேசியத் திட்டத்தின் கீழ் இளையோர்களின் வளர்ச்சியில், அவர்கள் நாட்டுக்கு அளிக்கக் கூடிய பங்களிப்பானது திறன்களின் அடிப்படையில் மட்டுமல்லாது அவர்தம் நன்னெறிப் பண்பிலும் அமைந்திருக்கின்றது என்பதாகக் குறிப்பிட்டு நன்னெறிப் பண்புகளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றார் (Malaysia, 2010, ப.53-54).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



முன்னாள் பிரதமர் வகுத்த 2020 தொலைநோக்குத் திட்ட வரைவில் கூட நன்னெறிப் பண்புகள் என்பன முதன்மைப்படுத்தப்பட்டிருப்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது (Tun Dr Mahathir Mohamad, 2009, ப.4).

மேற்குறிப்பிட்ட இத்தகைய நன்னெறிப் பண்புகளை மாணவப் பருவம் தொட்டே மலேசியர்களின் உள்ளத்தில் விதைக்கும் வகையில் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான நன்னெறிக் கலைத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 14 அடிப்படை நன்னெறிக் கூறுகளை அடையாளப்படுத்தியிருக்கின்றது. இந்நன்னெறிக் கூறுகளைத் திறப்பட மாணவர் மனங்களில் பதியச் செய்ய வேண்டிய மிகப் பெரிய கடப்பாடு ஆசிரியர்களுக்கு உள்ளது. இந்தக் கலைத்திட்டமானது நன்னெறிப் பண்புகளை எளிய உதாரணங்களுடன் விளக்கப்படுத்தியிருக்கின்றது. கற்றல் திறனில் இப்பகுதிகளை மேம்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கற்பித்தல் திறனில் முதற்கண் கொடுக்கப்பட்டுள்ள நன்னெறிக் கூறுகளுக்கான கருத்துரு (concept) உருவாக்கம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அதற்கு அடுத்த நிலையில் விளைப்பயன் மிக்க கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் நன்னெறிக் கூறுகளை மாணவர்களிடம் சேர்ப்பதற்கு உரிய தரவுகளை அடையாளம் காணுதல் முக்கியமாகின்றது. அவ்வகையில் பயிற்றுத் துணை ஆவணங்களை அடையாளம் காண வேண்டிய ஒரு முக்கியமான செயல்திட்டம் உள்ளது. அடையாளம் காணப்படும் பயிற்றுத் துணை ஆவணங்கள் எளிதில் புரியக் கூடியவையாகவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாகவும் அமைவது சிறப்பு.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



பொதுவில் இதுபோன்ற பயிற்றுத் துணை ஆவணங்கள் தயாரிப்பதற்குப் பழைய இலக்கியங்களையும் அதில் உள்ள உதாரணங்களையும் கைக் கொள்வது வழக்கமாக இருக்கின்றது. நிகழ்காலத்தில் மாணவர் சமுதாயத் தாக்கத்தைத் தூண்டும் துறைகளுள் திரைப்படங்களும் தகவல் தொழில்நுட்பமும் முதன்மையாக இருக்கின்றன (சில்லாழி, 2015, ப.79 ). அந்த வகையில் தற்போதைய ஆய்வானது கற்றல் கற்பித்தலில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தரவுகளைக் கண்ணதாசனின் திரைப்படத்துறையைக் குறிப்பாகத் திரையிசைப் பாடல்களை ஆராய்ந்து முன் வைக்கின்றது.

தற்காலத்தில் திரைப்படத்துறையானது வெறும் மனமகிழ் சாதனமாக மட்டும் அல்லாமல் சமூகவியல், பண்பாடு, கல்வி, பொருளாதாரம், அரசியல், ஆட்சி என எல்லாத் துறைகளிலும் பங்களிப்புச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்க துறையாக வளர்ந்துள்ளது என்பது அறிஞர் பலரின் ஒருமித்தக் கருத்தாக இருக்கின்றது. மேலும், இந்தத் திரைப்படத்துறையே ஒரு தனித்த கல்வி இயலாக வளர்ந்துள்ளது (Cinema as an academic field). இன்றைய காலத்தில் திரைப்படத்துறையானது அனைத்தையும் தன்னுள் அடக்கப்படுத்திக் கொள்ளும் வல்லமையுடையதாகவும், மக்கள் மனதில் மன மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய ஆற்றல் உடையதாகவும் விளங்குவதால் இதனைக் கற்றல் திறனில் பயன்படுத்தும் வழக்கம் மேலை நாடுகளில் 1990-களிலேயே தொடங்கிவிட்டது. அதில் ஒரு புதிய முயற்சியாகத் தமிழ்த் திரையிசைப் பாடல்களை நன்னெறிப் பாடப் போதனையில் தரவுகளாகப் பயன்படுத்தலாம் என்பதனை இந்த ஆய்வு முன்வைக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்த் திரையுலகிலும் தமிழர் மனங்களிலும் ஆஸ்தானக் கவியாகத் திகழ்ந்து பல அரிய படைப்புகளைத் தமிழ் உலகுக்குத் தந்த முத்தைய்யா எனும் இயற்பெயர் கொண்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் மேற்சொன்ன நோக்கத்திற்காக இந்த ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றன.

## 1.2. ஆய்வின் நோக்கம்

I. தேர்ந்து எடுக்கப்பட்ட கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் காணக்கிடக்கும் நன்னெறிக் கூறுகளைத் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்ட கூறுகளின் அடிப்படையில் அடையாளம் காணல்.

II. தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் 14 நன்னெறிக் கூறுகளுக்கான அடிப்படை கருத்துருவாக்கத்தைப் படைத்தல்.

III. அடையாளம் காணப்பட்டிருக்கும் கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் வெளிப்படுத்தும் நன்னெறிக் கூறுகளுக்கும் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கூறுகளுக்கும் ஒற்றுமை அம்சங்களைப் பகுப்பாய்வு செய்து விவரித்தல்.

IV. கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் கூடுதலான புதிய நன்னெறிக் கூறுகளை அடையாளம் கண்டு பகுப்பாய்ந்து, தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3. ஆய்வு வினா

ஆய்வின் நோக்கத்தை முன்னிருத்தியே ஆய்வின் வினாக்களும் அமைகின்றன. அவை பின்வருமாறு:-

I. கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் நன்னெறிக் கூறுகள் தொடர்பான தரவுகளைக் கொண்டுள்ளனவா?

II. தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள 14 நன்னெறிக் கூறுகளுக்கான செறிவான கருத்துருவாக்கத்தை எப்படி அமைக்கலாம்?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



III. அவ்வாறு காணப்படும் தரவுகள் எந்த அளவுக்குத் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் நன்னெறிக் கூறுகளோடு ஒத்து இருக்கின்றன?

IV. தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் 14 நன்னெறிக் கூறுகளை விளக்கப்படுத்துவதற்குக் கண்ணதாசனின் திரையிசைப்பாடல்களைப் பயிற்றுத் துணை ஆவணமாகப் பயன்படுத்துக் கூடிய சாத்தியம் உண்டா?

V. தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் நன்னெறிக் கூறுகளைத் தவிர்த்து வேறு ஏதேனும் புதிய நன்னெறிக் கூறுகள் கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் காணக்கிடக்கின்றனவா?

VI. அவ்வாறு கண்டறியப்பட்ட கூடுதல் நன்னெறிக் கூறுகள் எவ்வகையில் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளக் கூடும்?

## 1.4. ஆய்வின் முக்கியத்துவம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதுவரை வெளிவந்துள்ள தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் நன்னெறித் கூறுகள் குறித்த ஆய்வுகளை ஆய்வு முன்னோடிகள் பகுதியில் ஆராயப்பட்டது. அதன்வழி பெருவாரியாக, இப்பாடத்திட்டத்தின் பயிற்று முறை, பயிற்றுமுறையின் விளைப்பயனை அறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள், மாணவர்கள் இக்கூறுகளை உள்வாங்கிக் கொள்ளும் திறம் குறித்த ஆய்வு, நன்னெறிப்பாட கலைத்திட்டம் தொடர்பன ஆய்வு என ஆய்வுகள் சில உள்ளன என்பது அறியப்படுகின்றது.

ஆயினும் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தில் உள்ள 14 நன்னெறிக் கூறுகளுக்குக் கருத்துரு (concept) அமைக்கும் ஆய்வு முயற்சிகள் இதுவரையிலும் வெளிவரவில்லை. அந்த வெற்றிடத்தை (gap) நிறைவு செய்யும் முயற்சியாகத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தற்போதைய ஆய்வின் அடிப்படைத் தேவை கருதி 14 நன்னெறிக் கூறுகளுக்கும் ஆய்வுப்பூர்வமான கருத்துருவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இது மேற்சொன்ன நன்னெறிக் கூறுகளின் விளைப்பயன் மிக்கப் புரிதலுக்குப் பெரும் பங்காற்றும்.

சில ஆய்வாளர்கள் மேற்சொன்ன 14 நன்னெறிக் கூறுகளை விளக்கிச் சொல்வதற்குப் பெரிய இலக்கியங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆயினும், தற்போதைய ஆய்வின் பார்வையில் அதாவது, கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் நன்னெறிக் கூறுகள் அடிப்படையில் எந்த ஓர் ஆய்வும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது முந்தைய ஆய்வுகளை மதிப்பீடு செய்ததன் வழி அறிய முடிகின்றது.

திரையிசைப் பாடல்களையும் குறிப்பாகக் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களையும் பயிற்றுத் துணை ஆவணங்களாகப் பயன்படுத்த முடியும் என்பதைத் தற்போதைய ஆய்வு முன் வைப்பதன் வழி, ஒரு புதிய ஆய்வுக் களத்திற்கு அடித்தளம் அமைத்துள்ளது. எனவே, இது தற்போதுள்ள கற்றல் கற்பித்தல் அறிவுக்கு (existing body of knowledge) புதிய பங்களிப்பைப் பயக்கவல்லதாக அமைகின்றது. இதன்வழி இத்துறையில் பல புதிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், இதுவரையில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளை ஒரு புதிய பார்வையில் அணுகுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5. ஆய்வு சிக்கல்

ஆய்வு சிக்கல் (research problem) என்பது ஓர் ஆய்வின் வழி நாம் தீர்க்க விழையும் அல்லது விடைகாண விழையும் சிக்கலை விளக்கப்படுத்தி அதன் தேவையையும் குறிப்பிடுவதே ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தற்போதைய ஆய்வில் முதன்மைச் சிக்கலாகத் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் 14 நன்னெறிக் கூறுகளுக்கான செறிவான கருத்துருவாக்கத்தை உருவாக்குதல் அமைகின்றது.

இவ்வாறு கருத்துருவாக்கம் பெற்ற 14 நன்னெறிக் கூறுகளாவன கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் காணக் கிடக்கும் நன்னெறிக் கருத்துகளோடு இயைந்து உள்ளனவா என்பது ஆய்வின் வழி தீர்வு காணப்படவேண்டிய பிரிதொரு முக்கியமான சிக்கலாகும்.

இதன் அடிப்படையில், கண்ணதாசன் திரையிசைப் பாடல்களைக் கொண்டு தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் 14 நன்னெறிக் கூறுகளை விளக்கப்படுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளதா என்பது மற்றொரு ஆய்வுச் சிக்கலாக இருக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடுத்து, தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கல்விப் பாடத்திட்டத்தின் 14 நன்னெறிக் கூறுகளைத் தவிர்த்து வேறு நன்னெறிக் கூறுகள் ஏதும் கண்ணதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட திரையிசைப் பாடல்களில் உள்ளனவா என்பது பிரிதொரு ஆய்வுச் சிக்கலாக அமைகின்றது.

இறுதியாக, மேற்காணும் ஆய்வுச் சிக்கல்களுக்கு விடைகாணும் பட்சத்தில் ஆய்வின் நோக்கங்கள் அடையப்பெற்றனவா அல்லது மாறாக உள்ளனவா என்றதொரு பெரிய முடிவுகளுக்கு வரக்கூடிய நிலை ஏற்படும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.6. ஆய்வு மூலமும் வரையறையும்

இந்த ஆய்வு தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கலைத்திட்டத்தில் உள்ள 14 நன்னெறிக் கூறுகள் எவ்வாறு கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் பிரதிபலிக்கின்றன என்பதை ஆய்வு செய்கிறது. ஆகவே, இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான மூலக்கூறாகத் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கலைத்திட்டமும் (PPK, 2009, ப.5) கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை முறையே, கண்ணதாசன் இனிய திரையிசைப் பாடல்கள்; கண்ணதாசன் திரையிசையில் தத்துவப் பாடல்கள்; கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் எனும் தொகுப்புகளாகும்.

அடுத்து இந்த ஆய்வைச் செறிவாக வழிநடத்துதல் பொருட்டு சில வரையறைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கலைத்திட்டத்தில் உள்ள 14 நன்னெறிக் கூறுகளும் இந்த ஆய்வில் பயன்படுத்தப்படவுள்ளன. மேலும் இப்பதினான்கு கூறுகளுக்காகக் கலைத்திட்டத்தினுள் வழங்கப்பட்டுள்ள விளக்கங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடுத்து இந்த ஆய்வுக்காகக் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் பயன்படுத்தப்படவுள்ளன. கண்ணதாசன் மிக அதிகமான திரையிசைப் பாடல்களைப் புனைந்துள்ளார். இவை அனைத்தையும் முனைவர் பட்ட ஆய்வில் புகுத்தி ஆய்வு செய்ய முனைந்தால் அது பெரிதும் விரியும். மேலும், ஆய்விற்காகப் பல்கலைக்கழகம் நிர்ணயித்துள்ள சொற்களின் அளவையும் காலத்தையும் கடந்து விடும் சிக்கலும் உள்ளது. ஆகவே ஆய்வாளர்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



குடும்ப நூலகத்தார் வெளியீடு செய்துள்ள கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் அடங்கிய மூன்று தொகுப்புகளை மட்டுமே இந்த ஆய்விற்குப் பயன்படுத்துகின்றார்.

இந்த மூன்று தொகுப்புகளில் மொத்தம் 326 பாடல்கள் உள்ளன. அதிலும் இப்பாடல்கள் அனைத்தையும் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதற்கான சாத்தியம் இல்லை. ஏனெனில் இந்த ஆய்வானது தொடக்கப் பள்ளிகளுக்கான தர ஆவண நன்னெறிக் கலைத்திட்டத்தில் உள்ள 14 நன்னெறிக் கூறுகளை மட்டுமே ஆய்வு செய்கின்றது. இதன் அடிப்படையில் இம்மூன்று தொகுப்புகளுள் இடம் பெற்றுள்ள 326 படல்களுள் இப்பதினான்கு நன்னெறிக் கூறுகளின் கருத்துகளை உரைக்கக் கூடிய பாடல்கள் மட்டுமே தேர்வு செய்யப்படவுள்ளன. அதோடு புதிய நன்னெறிக் பண்புகளைச் சுட்டக் கூடிய பாடல்கள் ஏதேனும் இருப்பினும் அவையும் கவனத்தில் கொள்ளப்படும். இதற்குச் சம்பந்தமில்லாத பாடல்கள் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. அதன் அடிப்படையில் சில பாடல்கள் ஆய்வில் இடம் பெறாமல் போவதற்கும் வாய்ப்புண்டு. இந்த வரையறையின் மூலமாக ஆய்வானது நன்னெறிக் கூறு எனும் மூலக் கருப்பொருளை விட்டு அகலாமல் நேர்த்தியாகச் செல்வதற்கு வழி அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களைக் காணும் போது அவை யாவும் பொதுவில் நன்னெறிக் கூறை மட்டும் முன்வைப்பதற்காக எழுந்த பாடல்கள் அல்ல. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் எழுதப்பட்டதன் நோக்கமானது அது சார்ந்த திரைப்படம், அதன் காட்சி அமைப்புகள் போன்றவற்றைச் சார்ந்ததாகவே இருந்துள்ளது. ஆகவே, இதில் ஏதாவது ஒரு நன்னெறிக் கூறை ஒரு பாடல் முன் வைக்குமாயின் அது எந்த வரியில் இடம் பெறுகிறதோ அந்த வரிகளை மட்டுமே ஆய்வுத் தரவாக இந்த ஆய்வில் பயன்படுத்தப்படவுள்ளன. இதனால் தேவையற்ற வரிகள் நீக்கப்படுவதோடு ஆய்வின் நோக்கம் தவாறமல் இருக்கவும் வகை செய்யும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மேலும் இந்த வரையறையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகள் மிக ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு புதிய தகவல்களை வெளிப்படுத்தவும் வழிகோலும்.

கண்ணதாசனின் ஒரே ஒரு பாடலில் வெவ்வேறு நன்னெறிக் கூறுகள் வெளிப்படலாம். அவ்வாறு வெளிப்படும் போது ஒரு முழுப் பாடலை ஒரு நன்னெறிக் கூறை ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தும் போது அதனை மற்ற நன்னெறிக் கூறை ஆய்வு செய்யப் பயன்படுத்த இயலாமல் போவதற்கும் வாய்ப்புண்டு. அவ்வாறு பயன்படுத்தினாலும் அது கூறியது கூறலாக அமைய இடமுண்டு. இக்காரணத்தை முன்னிறுத்தியும் இந்த ஆய்வில் நன்னெறிப் பண்புகளைக் குறிக்கும் பாடல் வரிகள் மட்டுமே தரவுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7. இயல் பகுப்பு

இந்த ஆய்வானது மொத்தம் ஐந்து இயல்களில் பகுக்கப்பட்டுள்ளது. இதில் முதல் இயலானது ஆய்வின் ஒட்டுமொத்த வடிவமைப்பை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளது. முதல் இயல் முன்னுரை, ஆய்வின் நோக்கம், ஆய்வுக் கேள்விகள், ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வின் சிக்கல், ஆய்வு மூலமும் வரையறையும், இயல் பகுப்பு, ஒட்டுமொத்த முடிவுரை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

அடுத்து இரண்டாவது இயல் முழுமையும் முந்தைய ஆய்வுகளைக் குறித்த தகவல்களை முன் வைப்பதோடு, அவை எவ்வாறு தற்போதைய ஆய்வுக்கு உறுதுணையாக விளங்குகிறன என்பதையும் விவரிப்பதாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi